மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA
WELLA HAIR DRESSING
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT
No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 02 | குரல்: 134 | வள்ளுவர் ஆண்டு 2054 | திங்கட்கிழமை 15.01.2024 |

# ரணிலுக்கு ஆதரவு வழங்கத் தயார்! நிபந்தனைகளை கூறிய சம்பந்தன்!



பக்கம்–07



## ”தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக மும்முனைப் போட்டி!

பக்கம்–03

## தைப்பொங்கலும் மாட்டு வண்டிச் சவாரியும்: ஈழத் தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டு!



பக்கம்–04

## தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ ராஜபக்சர்களே காரணம்!



மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு!

பக்கம்–03

## மக்கள் வாழ முடியாத ஒரு நாடாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது!



பக்கம்–09

அநுரகுமார திசாநாயக்க அதிருப்தி!



# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள். SCAN ME

## தைத் திருநாளுக்கு வாழ்த்துவதா? வேண்டாமா?

கிழக்கின் மயிலத்தமடு மாதவணையில் பசுக்களுக்கும் காளைகளுக்கும் அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களைச் சேர்ந்த சிங்களவர்களால் இழைக்கப்படும் கொடுமைகள் சொல்லிலடங்காதவைகளாகக் காணப்படுகின்றன. விலங்குகளுக்கும் உயிரினங்களுக்கும் ஜீவகாருண்யம் சொல்லிக் கொடுத்த நம்மவர்களால் அங்கு நடைபெற்றுவரும் கொடுமைகளுக்கு முடிவுகட்ட முடியாதிருக்கிறது.

விவசாயமும் கால்நடை வளர்ப்பும் இணைந்தான தமிழர்களின் பாரம்பரியத்தில் கால்நடைகளுக்கு ஒரு முக்கிய பங்குண்டு. அந்தவகையில் இன்றைய தினமான தைப் பொங்கல் மற்றும் நாளைய பட்டிப் பொங்கலும் சிறப்பு மிக்கது. இருந்தாலும் மட்டக்களப்பு மாதவணை, மயிலத்தமடு மேய்ச்சல்தரையில் அத்துமீறி குடியேறவும் பயிர் செய்யவும் முனையும் சிங்களப் பெரும்பான்மை ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ச்சியாக பசுக்களுக்கும் காளைகளுக்கும் கொடுக்கும் துயரம் சொல்லொணாததாகும்.

வெங்காய வெடி வைத்து அவற்றின் வாயில் கொடும் காயங்களை ஏற்படுத்தி உணவு உண்ணக்கூட முடியாததாக மாற்றி உயிரிழக்கச் செய்தல், பொறி வெடிகளின் மூலமும் சுருக்குகளின் மூலமும் அவற்றைக் கொலை செய்தல், சுட்டும், வெட்டியும், மின்சாரம் பாய்ச்சியும் இந்த பசுக்களுக்கும் காளைகளிற்கும் துன்பங்களை ஏற்படுத்தல் எனத் தொடரும் கொடுமைகளுக்கு அரசாங்கமோ அரசியல் தரப்பினரோ முடிவினைக் காணமுடியாதிருக்கிறது.

யுத்த மௌனிப்புக்குப் பின்னர் தொடங்கிய மட்டக்களப்பின் மேய்சல் தரை மீதான சிங்களப் பெரும்பான்மையினரின் அத்துமீறல்கள், ஆக்கிரமிப்புக்கள் படிப்படியாக அதிகரித்து பண்ணையாளர்களுக்கு பெரும் நெருக்கடியைக் கொண்டுவந்தது. அது இன்னமும் தீர்க்கப்படாததொன்றாக மாறி வளர்ந்து நிற்கிறது.

மேய்ச்சல் தரைப் பிரதேசத்தில் நடைபெற்று வருகின்ற அத்துமீறல்களுக்கும் கொடுமைகளுக்கும் தீர்வு கிடைக்கவேண்டி பண்ணையாளர்கள் ஏறாத இடமில்லை, கோரிக்கை விடுக்காத ஆட்களில்லை எனும் அளவுக்கு நிலைமை ஏற்பட்ட போதும் அடிமட்டம் முதல் உயர்மட்டம், அதியுயர் மட்டமும் கூட தீர்த்து வைக்காததொன்றாக மாறியது. அதனால் பண்ணையாளர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

நான்கு மாதங்களை எட்டுகின்ற அவர்களின் போராட்டத்திற்கு இதுவரையில் தீர்வு கிடைக்கவில்லை. ஜனாதிபதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்த வேளை நடைபெற்ற பேச்சின் பயனால் வழங்கப்பட்ட முடிவுகள் பயனற்றுப் போயின. நீதிமன்றத் தீர்ப்புகள் கூட சரியாக அமுல்படுத்தப்படாத, அமுல்படுத்த முடியாததாகக் காணப்படுகிறது.

இப்பொழுதும் கூட சுட்டும், வெட்டியும், மின்சாரம் பாய்ச்சியும் இந்த பசுக்களுக்கும் காளைகளிற்கும் ஏற்படுத்தப்பட்டு வரும் கொடுமைகள் பூரணமாக நிறுத்தப்பட வேண்டும் என்பதே பண்ணையாளர்களின் கோரிக்கையாக இருக்கும் அளவிலேயே நிலைமை காணப்படுகிறது.

அரசினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும், நீதிமன்றத் தீர்ப்புகளும் முறையாக அமுல்செய்யப்படுவது உறுதிப்படுத்தப்படவில்லை, கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளில் நடைபெறும் சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு முடிவில்லை எனத் தொடரும் நிலையில் எதனை செய்வதென்று தெரியா நிலையிலேயே பண்ணையாளர்கள் காணப்படுகின்றனர். அத்துமீறலாளர்களால் மேற்கொள்ளப்படும் கொடுமைகளால் இழக்கப்படுவது கால்நடைகளின் உயிர்கள் மாத்திரமல்ல பண்ணையாளர்களின் பொருளாதாரமும் தமிழர்களின் பொருளாதாரமுமாகும்.

இதற்கான தீர்வு மேய்ச்சல்தரைக்கான சட்டரீதியான பிரகடனமும், சட்டவிரோத நடவடிக்கைகளின் நிறுத்தம் மற்றும் பண்ணையாளர்களுக்கான முழுமையான பாதுகாப்புமே. இருந்தாலும் அது எட்டப்படுவது எப்போது என்பதே கேள்வி.

மட்டக்களப்பு சித்தாண்டியில் நடைபெற்றுவரும் சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டம் முடிவெதுவுமின்னித் தொடரும் நிலையில் நாளை மட்டக்களப்பின் காந்திப் பூங்காவில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் கவனயீர்ப்பு கொஞ்சமேனும் பயனைக் கொடுக்க வேண்டும்.

உழவுக்கு உறுதுணையாக இருக்கும் பசுக்களிற்கும் காளைகளிற்கும் பொங்கலிட்டு நன்றி செலுத்தும் நாளில் நடைபெறும் இந்த கவனஈரப்பில் பங்கு கொள்வது ஒவ்வொரு தமிழரதும் கடமை.



# தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ ராஜபக்சர்களே காரணம்!



## மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு!

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ ராஜபக்சர்களே காரணம் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாதப் போராட்டத்தால் இந்த நாட்டில் மூவின மக்களும் பாதிக்கப்பட்டார்கள். அதில் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். 2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் பயங்கரவாதப் போராட்டத்துக்கு நாம் முடிவு கட்டிய பின்னர் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள்.

ராஜபக்சக்களை ஆதரிக்கும் தமிழ் உறவுகள்

ஆனால், அவர்களை வைத்துக்கொண்டு இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளும், வெளிநாடுகளில் வாழும் புலிகளின் ஆதரவாளர்களும் சுயலாப அரசியலை நடத்துகின்றனர்.

இது கவலையை ஏற்படுத்தும் விடயம். அவர்கள், தமிழ் மக்கள் மீது போராட்ட சிந்தனையைத் தூண்டினாலும் அந்த மக்கள் மீண்டும் போரை விரும்பவில்லை. நிம்மதியான வாழ்க்கையே அவர்களின் விருப்பம்.

அதை நாம் அவர்களுக்கு 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தவுடன் ஏற்படுத்திக் கொடுத்து விட்டோம். வடக்கு - கிழக்கில் ராஜபக்சக்களை ஆதரிக்கும் தமிழ் உறவுகள் பலர் உள்ளனர்.

அவர்களுக்கு நாம் என்றும் நன்றி கூறுவோம். எதிர்வரும் தேர்தல்களில் வடக்கு - கிழக்கில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்படாது.

வழமை போன்று எமக்குரிய வாக்குகள் கிடைக்கும். மொட்டுக் கட்சியின் வெற்றியில் தமிழ் மக்களின் பங்களிப்பும் முக்கிய இடம் வகிக்கும்." - என்றார்.

# "தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக மும்முனைப் போட்டி! கிழக்கிற்கு செயலாளர் பதவி வழங்க வேண்டும்"

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக மும்முனைப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

அவரது இல்லத்தில் நேற்று ( 14.01.2024) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக மும்முனைப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் போட்டிக்களமாக இந்த உள்ளக விடயத்தை மாற்றி விடாமல் விட்டுக்கொடுப்புடன் ஏகமனதாக ஒரு தலைவரைத் தெரிவு செய்கின்ற பாரம்பரியத்தைப் பின்பற்ற வேண்டும்.

இந்த விடயம் குறித்து கட்சியின் மூத்த தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஐயா அண்மையில் தெரிவித்துள்ளார். இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒருநாள் அவகாசத்தையும் கேட்டிருப்பதோடு, அதன் பின்னர் ஒரு ஜனநாயக ரீதியாக போட்டியின் அடிப்படையில் யார் தலைவர் என்பதை தெரிந்து கொள்வதற்காக முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நான் அறிகின்றேன்.

தற்போது பிரதேசக் கிளை உறுப்பினர்கள் வாக்களிப்பதன் ஊடாக அதிகளவு வாக்குகளைப் பெறுபவர்கள் தான் தமிழரசுக் கட்சியின் தலைவராக வரமுடியும் என முடிவு எட்டப்பட்டிருக்கின்றது. எதிர்வரும் 21 ஆம் திகதி அதற்கான முடிவு ஜனநாயக அடிப்படையில் எடுக்கப்படும் என் நான் நம்புகின்றேன்.

எனவே தமிழ் தேசியம் சார்ந்து எமது முடிவுகளை நாங்கள் எடுப்பது மிகவும் பொருத்தமாக அமையும் என நான் நினைக்கின்றேன்.

எனினும் கட்சியின் தலைவர் பதவிக்காகத்தான் போட்டி நிலவுகின்றது மாறாக செயலாளர் பதவிக்கான போட்டிகள் நிலவுவதாக எனக்குத் தெரியவில்லை.

வடக்கிற்கு தலைவர் பதவி கொடுத்தால் கிழக்கிற்கு செயலாளர் பதவி வழங்க வேண்டும் எனும் ஓர் தார்மீக சிந்தனை காணப்படுகின்றது.

எனவே, பொருத்தமானவர்களுக்கு தலைவர் பதவி கொடுக்கப்பட்டால் இலங்கை தமிழரசுக் கட்சியை சரியான திசையில் நகர்த்திக் கொண்டு செல்வதற்கு வசதியாக இருக்கும் என தான் நம்புவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் குறிப்பிட்டுள்ளார்.

# தைப்பொங்கலும் மாட்டு வண்டிச் சவாரியும்: ஈழத் தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டு!



ஆதிகாலத்தில் உழவுத் தொழிலே தமிழர்களின் முதன்மைத் தொழிலாக இருந்து வந்துள்ளது. தமிழர்கள் விவசாயிகளாக இருந்ததால் இயற்கை சார்ந்த பூமித்தாய்க்கும், சூரியனுக்கும், மற்றும் தங்கள் விவசாயத்திற்கு உதவியாக இருந்த மாடுகளுக்கும் நன்றி சொல்லும் நாளாகத் தைப்பொங்கலைத் தொன்று தொட்டுக் கொண்டாடி வருகின்றனர்.

### தைப்பொங்கலும் மாட்டு வண்டிச் சவாரியும்:

தைப்பொங்கல் தமிழர் திருநாளாகும். உழவர் திருநாள் என்றும் இதை அழைப்பர். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று சொல்வதற்கமைய தையே தமிழரின் புத்தாண்டு என்றும் கூறிடுவர்.

தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல், அல்லது பட்டிப் பொங்கல் என்று சொல்லி, உழவர்களுக்குத் துணையாக இருந்த மாடுகளுக்குப் பொங்கிப்படைப்பது தமிழர் வழமை.

புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் 'தைத்திங்கள்' பற்றிக் குறிப்புகள் இருக்கின்றன. 'தைத்திங்கள் தண்கயம் படியும்,' 'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம்.

சங்க இலக்கியங்களான சிலப்பதிகாரத்தில் இந்திரவிழாவான பொங்கல் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. 'வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும்..' என்று உழவுத் தொழில் பற்றி ஔவையார் குறிப்பிடுகின்றார். 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

தைப்பொங்கல் என்றாலே தமிழ் மக்களின் வாழ்வில் விழாக்கோலம் தோன்றிடும் பண்டிகைக் காலமாக அமைந்திடும். தமிழ் மக்களின் வாழ்வில் புது விடியலாக பிறக்கும் தைப் பொங்கல் நாட்களிலேயே , தமிழரின் வீர விளையாட்டுக்களான ஜல்லிக்கட்டு தமிழகத்திலும், மாட்டு வண்டிச் சவாரி ஈழத்திலும் செழிமையாக காலங்காலமாக நடாத்தப்படுகிறது.

### தமிழரின் பாரம்பரிய விளையாட்டு :

தை பிறந்த பின்னரே உழவரின் வாழ்வும் சிறப்படையும். உழவர்களின் வாழ்வியல் திறமைகளை வெளிக்கொணரும் விளையாட்டே மாட்டு வண்டிச் சவாரியாகும்.

விழாக்கோலம் தோன்றிடும் பண்டிகைக் காலமாக அமைந்திடும் தைப்பொங்கல் தமிழ் மக்களின் வாழ்வில் புது விடியலாக பிறக்கும். தமிழரின் வீர விளையாட்டுக்களான ஜல்லிக்கட்டு தமிழகத்திலும், மாட்டு வண்டிச் சவாரி ஈழத்திலும் செழிமையாக காலங்காலமாக தைப் பொங்கல் நாட்களிலேயே விமர்சையாக நடாத்தப்படும்.

ஈழத்தில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது. மாட்டு வண்டிச் சவாரி ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலப் பகுதி வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படு கின்றது.

மாட்டு வண்டிச் சவாரி தமிழர்களின் பண்பாட்டை ஒருபுறம் அடையாளங் காட்டி நிற்க, மறுபுறம் விவசாயத்தின் முதுகெலும்பான தரமான காளைகளை வளர்க்கும் கால்நடை வளர்ப்பின் முக்கிய உந்து சக்தியாகவும் அது காணப்படுகின்றது.

சவாரிக்கான மாடுகள் அவற்றின் பிறப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. இது ஒரு வீர விளையாட்டு என்ற காரணத்தினால் சவாரி வண்டியில் பூட்டப்படும் காளை மாடுகளும் கம்பீரமும், வீரமும் மிக்கவையாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

### யாழில் மாட்டு வண்டிச் சவாரி :

ஏறு தழுவுதல் தமிழ் நாட்டின் வீர விளையாட்டு என்றால் ஈழத் தமிழர்களின் வீர விளையாட்டாக மாட்டு வண்டிச் சவாரி அமைகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது. முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு. திருகோணமலை ஆக்கிய இடங்களிலும் மாட்டு வண்டிச் சவாரி காலம் காலமாக தொடர்வதை நாம் அவதானிக்கலாம்.

அக்காலப்பகுதிகளில் யாழ்பாணம் முழுவதும் பிரபலமான சவாரி ஓட்டுநர்களாக அளவெட்டி சிவஞானம், சவாரிக்கார வன்னித்தம்பி, பண்டத்தரிப்பு தங்கராஜா, சவாரிக்கார சபாபதி, சிதம்பரப்பிள்ளை, கரவெட்டி இளையாம்பி போன்றவர்கள் காணப்பட்டனர். மாட்டு வண்டில் சவாரியைப் பொழுதுபோக்காக மாத்திரமன்றித் தொழிலாகவும் செய்தவர்கள் பலருளர். அவ்வாறு மாட்டுவண்டிச் சவாரித் தொழிலில் ஈடுபடுவோரை "சவாரி" என்றே அடைமொழி வைத்து அழைப்பதும் பழக்கத்தில் இருந்துள்ளது.

தொடர்ச்சி 05 பக்கம்

# தைப்பொங்கலும் மாட்டு வண்டிச் சவாரியும்: ஈழத் தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டு!



சவாரி வண்டிலில் ஆசனப் பலகையில் இருந்து மாடுகளை சுறுசுறுப்பாக அவர் வழி நடத்திச் செல்லுவார்.

தினகரன், ஈழநாடு நாள் ஏடுகள் நடத்திய போட்டி மாட்டுச் சவாரியைத் தேசிய விளையாட்டு நிலைக்கு உயர்த்தின என்றால், 1974 இல் நடந்த அனைத் துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இக்கலையை அனைத்து உலக நிலைக்கு உயர்த்தியது. இதுவரை காலமும் யாழ்ப்பாணத்து மக்கள் பார்த் துச் சுவைத்த இப்போட்டியை வேளிநாடுகளில் இருந்து வந்த பார் வையாளர் பார்த்துப் பாராட்டினர். கைதட்டி மகிழ்ந்தனர். தமிழ் நாட்டில் சென்னை, மதுரை ஆகிய இடங்களில் நடந்த அனைத்துலகத் தமிழ் மாநாடுகளின்போது சல்லிக்கட்டுக் காளை விளையாட்டு எல்லோருடைய பாராட்டையும் பெற்றது. அதேபோன்ற பாராட்டு யாழ்ப்பாணத்துச் சவாரிக்கும் கிடைத்தது.

யாழ்ப்பாணத்துக் கமக்காரர் மட்டும் சவாரியில் ஆர்வம் உடையவர்களெனக் கொள்தல் பொருந் தாது. கோப்பாய் நாகநாதன், தமிழரசுத் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம், சட்டத்தரணி "ஜயக்கோன் " செல்லத்துரை போன்றவர் இக்கலையில் பெரும் ஈடுபாடுடையவர். இக்கலையை நவீன மயப்படுத்தி விதிமுறைகளை ஏற்படுத்தவேண்டும் என்பதில் கற்றவர் பலரும் ஆர்வம் காட்டி வந்தனர்.

அரசாங்க அலுவலராகக் கடமை புரிந்த "இலங் கையர்கோன்" சிவஞானசுந்தரம், 'சவாரி' செல்வரத் தினம், அரசாங்க மரக்

கூட்டுத்தாபன உத்தியோகத்தர் சுன்னாகம் . இளையதம்பி போன்றோர் ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரிக்கு பெரும் பணி ஆற்றியுள்ளனர்.

ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரியானது ஒரு இடத் தில் நடக்கப்போகின்றது என்றால், அது அனை வருக்கும் பெரும்பாலும் ஊடகங்கள் வாயிலாகத் தெரியப்படுத்தப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் இந்தப்போட்டியானது நீர்வேலி சவாரித்திடல், முல்லைத்தீவு மாவட்டம் வவுனிக்குளம், முழங்கா வில், கிளிநொச்சி, மன்னார், கரவெட்டி, ஆவரங் கால் போன்ற இடங்களில் பெரும்பாலும் நடைபெறு வது வழக்கமாக இருந்தது.

எமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு எமது அடுத்த தலைமுறையிரிடம் இருப்பதால் இவ் விளையாட்டுக்களை பற்றி, முக்கியமாகப் புலம் பெயர்ந்த அடுத்த தலைமுறையினருக்கும் அறியத் தருவோம்.

தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரத்தையும், பழந் தமிழ் வீர விளையாட்டுக்களையும், தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது தாயக மக்களின் கடமை மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர் களின் பெருங்கடமையும் காலத்தின் கட்டாயமு மாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 +94 77 149 9094
தேசியம் www.thesiyamnews.com THESIYAM தேசியம்



# தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் தேசிய மகாநாட்டில் அறிவிக்கவுள்ள ஈரோஸ் ஜனநாயக முன்னணி!



தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவதென்பது முக்கியமான விடயம். எழுந்தமானமாக அதற்கான பதிலை கூறிவிடமுடியாது. பொதுக்குழுவில் ஆராய்ந்து இவ்விடயம் தொடர்பாக கட்சியின் தேசிய மகாநாட்டிலே நாங்கள் அறிவிக்கவிருக்கிறோம். ஈரேஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கட்சியின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் திருமலை மாவட்டத் தலைவருமான கதிர் திருச்செல்வம், பொருளாளர் க.சிறிஸ்கந்தராஜா ஆகியோரும் இணைந்திருந்தனர்.

இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ் பேசும் சமூகங்கள், அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாகியிருக்கின்றதும், நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருப்பதும் அனைவரும் அறிந்தது. இந்த நிலையில் ஈரேஸ் ஜனநாயக முன்னணியும் ஒரு பொறுப்புவாய்ந்த அரசியல் கட்சியாக பொறுப்புவாய்ந்த அரசியல் கட்சியாக தமிழ் பேசும் சமூகங்களின் உரிமை சார்ந்த விடயங்களில் கடந்த 9 வருடங்களாக எங்களுடைய செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறோம். எங்களுடைய அரசியல் செயற்பாட்டில் திருப்தியடைந்த தேர்தல் ஆணைக்குழு கடந்த 2022ஆம் ஆண்டு ஈரேஸ் ஜனநாயக முன்னணியை இலங்கையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவு செய்தது. அந்த வகையில் நாம் இன்னும் சிறிது காலத்தில் எமது கட்சியின் தேசிய மகாநாட்டைக் கூட்டவிருக்கிறோம். அந்த வகையில் தேசிய மகாநாட்டின் ஊடாக தமிழ் பேசும் சமூகங்களுக்குச் செய்யக் கூடிய அரசியல் பணிகளையும், செயற்பாடுகளையும் நாம் விரிவாக ஊடகங்களுக்கூடாகத் தெரிவிப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே இந்த நாட்டில் இருக்கின்ற வடக்கு கிழக்கு, மலையகத்தில் வாழுகின்ற ஒட்டுமொத்த தமிழ் பேசும் சமூகங்களின் எதிர்கால அரசியல் செயற்பாடுகளில் ஈரேஸ் ஜனநாயக முன்னணி தன்னுடைய காத்திரமான அரசியல் பணியை எதிர்காலத்தில் மிக வீரியமாக முன்னெடுக்கும்.

நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாதத் தடைச்சட்டமே, தமிழ் பேசும் மக்ளுக்கும் இலங்கை மக்களுக்கும் பெருத்த நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டிருக்கையில் புதிதாக அதனைவிடவும் மோசமான சட்டத்தை இலங்கையில் கொண்டு வருவது என்பது இந்த மக்களது ஜனநாயக உரிமையை மீறுவதாகவும் அந்த மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதாகவும் இருக்கும்.

இவ்வருடத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் மாதத்தில் நடைபெறவுள்ள மாகாநாட்டில் முடிவு செய்யப்படவுள்ளது.

அரசாங்கத்தினுடைய வரி அதிகரிப்பானது ஒட்டுமொத்த மக்களையும் எதிரான கருத்துடையவர்களாக ஆக்கியிருக்கிறது. மக்கள் மீது மேலதிக சுமையை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது. இந்த சுமையைக் குறைப்பதற்கான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடவேண்டும். அதற்கு பாராளுமன்றத்தில் இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்திற்கு அழுத்தத்தினை கொடுக்கவேண்டும். அவர்களுக்கான அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி செயற்படும்.

முக்கள் விரோத செயற்பாடுகள் ஆட்சியாளர்களோ வேறுயாரோ செய்கின்ற வேளை இந்த சமூக ஊடகங்கள் மக்கள் மத்தியில் இவ்வாறான செயற்பாடுகளைக் கொண்டு செல்கின்றன. ஆகவே இந்த சமூக ஊடகங்களை ஒடுக்குவதற்கு எடுக்கப்படுகின்ற இந்த நிகழ்நிலை காப்புச் சட்டத்தினை நாங்கள் எதிர்க்கிறோம். என்னவென்றால் மக்களுடைய நிகழ் நிலை காப்புச் சட்டம் பறிக்கின்றது. இந்தச் சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடனான செயற்பாட்டில் எமது முன்னணியும் ஈடுபடும்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவதென்பது முக்கியமான விடயம். எழுந்தமானமாக அதற்கான பதிலை கூறிவிடமுடியாது. ஈரோஸ் ஜனநாயக முன்னணி என்பது ஒரு கூட்டுச் செயற்பாட்டையுடைய அமைப்பு. பொதுக்குழுவில் ஆராய்ந்து இவ்விடயம் தொடர்பாக கட்சியின் தேசிய மகாநாட்டிலே நாங்கள் அறிவிக்கவிருக்கிறோம்.

அதே நேரத்தில் வடக்கு, கிழக்கு, மலையகத்தில் வாழ்கின்ற தமிழ் பேசும் சமூகங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைப்பது தொடர்பாகவும், மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏனைய முற்போக்கு அரசியல் சக்திகளோடும், தென்பகுதிகளோடு இருக்கின்ற முற்பொக்கு சக்திகளோடும் இனைந்து கொண்டு தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பது பற்றியும் சமூகம் சார்ந்த அனைத்து விதமான கேள்விகளுக்குமான பதிலை எமது தேசிய மகாநாட்டின் மூலமாக பகிரங்கப்படுத்தவுள்ளோம்.

இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்கின்ற அரசாங்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்கப் போவதாக தேர்தல் காலம் வரும் போது முன்வைப்பதாக அறிவிப்பது கடந்த காலங்களில் நடந்து கொண்டிருக்கின்ற ஒன்று. இது ஒரு தேர்தல் கால செயற்பாடாக இல்லாமல் அர்ப்பணிப்போடு தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் திரப்பதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்போடும் நேர்மையோடும் செயற்பட வேண்டும்.

அரசியலமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதான அறிவிப்பு இதற்குள் வந்துவிடக்கூடாது

கடந்த காலங்களில் நாட்டை ஆட்சி செய்திருக்கின்ற அரசாங்கம் தமிழ் மக்கள் சார்ந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றியதாக வரலாறில்லை. இனிமேலாவது அதில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

50 ஆண்டு வரலாற்றைக் கொண்ட ஒரு அமைப்பு 1975ஆம் ஆண்டு இதன் நிறுவனரான இரட்ண

தொடர்ச்சி 07 பக்கம்

# தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் தேசிய மகாநாட்டில் அறிவிக்கவுள்ள ஈரோஸ் ஜனநாயக முன்னணி

சபாபதி அவர்களுடைய எண்ணத்தில் உருவான ஈரோஸ்அமைப்பு 1987ஆம் ஆண்டுவரை ஒரு ஆயுதப் போராட்டக் களத்தில் தமிழ் மக்களுக்கான போராட்டங்களில் ஈடுபட்டதொரு அமைப்பு. 87க்குப் பின்னர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைத்துக் கொண்டு எங்களால் முடிந்த அரசியல் பணியைச் செய்து கொண்டிருக்கின்றோம். இந்த வகையில் 2015ஆம் ஆண்டு ஈரோஸ் ஜனநாயக முன்னணியை பிரகடனப்படுத்தியிருந்தோம். அதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மலையகத்தில் மக்களின் ஆதரவு பெற்ற அரசியலமைப்பாக வளர்ச்சியடைந்து வருகிறது.

இந்த நேரத்தில் ஆரம்ப காலத்திலிருந்து ஈரோஸ் அமைப்புடன் இணைந்திருந்த அத்தனை தோழர்களும் ஈரோஸ் ஜனநாயக முன்னணியோடு தங்களை இணைத்துக் கொள்ளுமாறு ஒரு பகிரங்க அழைப்பினை விடுக்கிறோம். அத்தோடு எங்களுடைய அரசியல் செயற்பாட்டுக்கு இலங்கையிலுள்ள தமிழ் பேசும் சமூகங்களும் தங்களுடைய ஒத்துழைப்புகளை நல்க வேண்டும்.

# ரணிலுக்கு ஆதரவு வழங்கத் தயார்! நிபந்தனைகளை கூறிய சம்பந்தன்!



வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தொடர்பில் ரணில் விக்ரமசிங்க வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் அவரது அரசுக்கு ஆதரவு வழங்கத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்தச் செய்தியில் சம்பந்தன் கூறியதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

”கடந்த காலங்களில் நாட்டின் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்காக தைப்பொங்கலையும், சிங்கள - தமிழ் புத்தாண்டையும் தெரிவு செய்திருந்தனர்.

எனினும், தமிழ் மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் பெற்றுக்கொடுக்கவில்லை.

இந்நிலையில், ஒவ்வொரு தைப்பொங்கலையும், தமிழ் - சிங்கள புத்தாண்டையும் தமிழ் மக்கள் மிகவும் எதிர்பார்புடனேயே கடந்து சென்றுள்ளனர்.

இந்தத் தடவை தைப்பொங்கல் காலத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார். அதற்கு ஏற்ற முறையில் அவர் செயற்படுவார் என நம்புகின்றோம்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு வடக்கு, கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற ஆசை அன்றிலிருந்து இருந்தது. எனினும், அவரைச் சுற்றியிருந்தவர்கள் அதற்கு இடம் கொடுக் காமல் இழுத்தடித்தனர். அதனால் தமிழ் மக்களின் நம்பிக்கை ஏமாற்றத்தில் முடிவடைந்தது.

தென்னிலங்கையின் இனவாத அரசியலுக்கு மத்தியில் தமிழ் மக்களுக்கு சற்று நிவாரணம் வழங்குவது மிகவும் கடினமான விடயம் என்பதை அனைவரும் புரிந்துகொண்டுள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இது தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும்.” என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இது தொடர்பில் எமது செய்தியாளர் சம்பந்தனிடம் வினவியபோது அவர் உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது






# பௌத்த மதத்தை இழிவுப்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை..!!



பௌத்த மதத்தை இழிவுப்படுத்தும் வகையிலான கருத்துகளை பரப்பி, பௌத்த தத்துவம் மற்றும் கலாச்சார விழுமியங்களுக்கு தீங்கு விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மகாநாயக்க தேரர்கள் கடிதம் ஒன்றின் மூலம் ஜனாதிபதியிடம் இந்த கோரிக்கை யினை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் கடந்த சில நாட்களாக நாட்டில் இடம்பெற்ற பல சம்பவங்களை அடிப்படையாக கொண்டு இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

# மயிலத்தமடு பசுக்களுக்கும் காளைகளுக்கும் இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்து யாழில் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு அழைப்பு!

மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் அத்துமீறி குடியேறவும் பயிர்செய்யவும் முனையும் ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ச்சியாக அங்கு மேய்ச்சலில் ஈடுபடும் பசுக்களுக்கும் காளைகளுக்கும் சொல்லொணாத் துயரங்களை ஏற்படுத்தி வருகின்றனர்

வெங்காய வெடி வைத்து அவற்றின் வாயில் கொடும் காயங்களை ஏற்படுத்தி அவை உணவு உண்ணக் கூட முடியாத, வார்ததையால் வடிக்க முடியாத கொடுமைகளை வாயில்லா ஜீவன்களுக்கு ஏற் படுத்தி வருகின்றனர்.

அதனை விட சுட்டும், வெட்டியும், மின்சாரம் பாய்ச்சியும் இந்த பசுக்களுக்கும் காளைகளிற்கும் ஏற்படுத்தப்பட்டு வரும் கொடுமைகள் பூரணமாக நிறுத்தப்பட வேண்டும்.

அரசினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும், நீதிமன்றத் தீர்ப்புக்களும் முறையாக அமுல் செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட்டு, பட்டி மேய்ச்சல் தரைகளிலிருந்து அனைத்து சட்டவிரோதிகளும் அகற்றப்பட வேண்டும்.

மேய்ச்சல் நிலத்தில் எந்தவொரு பிற நடவடிக் கைளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

இவற்றை ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் குரலாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பாக அரச இயந்திரத்திற்கு ஆணித்தரமாக வலியுறுத்து கின்றோம்.

சொல்லொணாத் துயரை சந்திதுள்ள கிழக்கின் பண்ணையாளர்களையும் பசுக்களையும் பாதுகாக்க அனைவரும் அணி திரள்வோம்.

தமிழர்களின் பசுக்களிற்கும் காளைகளிற்கும் பொங்கலிட்டு நன்றி செலுத்தும் உயரிய நாளில் அனைவரும் எமது உணர்வுகளை வெளிக்காட்ட யாழ் நல்லை ஆதீன முன்றலில் பட்டிப் பொங்கலான எதிர்வரும் 16.01.2024 செவ்வாய் மாலை 05 மணிக்கு, ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் கவனயீர்ப்பில் அனை வரையும் பங்கு கொண்டு கிழக்கின் மயிலத்த மடுவில் தொடர்ச்சியாக நடைபெறும் போராட்டங்கள் வெற்றிபெற வலுச்சேர்க்குமாறு வேண்டுகின்றோம் - என்கின்றனர்.



# நாங்கள் வாழ முடியாத ஒரு நாடாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது!

## அநுரகுமார திசாநாயக்க அதிருப்தி!





இலங்கையின் அரசியலில், பொருளாதாரத்தில் மற்றும் மனித வாழ்க்கையில் மாத்திரம் நெருக்கடி இருப்பதில்லை. மக்களின் சிந்தனையிலும் அவ்வாறுதான் இருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கண்டி தொகுதி மாநாடு கண்டியில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

“குருணாகலில் ஜோன்ஸ்டன், கண்டியில் மகிந்தானந்த, இரத்தினபுரியில் சொக்கா மல்லி, களுத்துறையில் ரோஹித அபேகுணவர்தன, கம்பஹாவில் பிரசன்ன ரணதுங்கவும், அநுராதபுரத்தில் எஸ்.எம்.சந்திரசேன போன்றோர் தெரிவு செய்யப்பட்டனர்.
நாம் சரியாக அவதானித்தால் கடந்த நாடாளுமன்றத்திற்காக தெரிவு செய்யப்பட்டவர்கள் யார் என்பது புலப்படும். பிரசன்ன ரணதுங்க கப்பம் வாங்கியமைக்காக நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர்.


இவர்கள் பலவந்தமாக நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தவர்கள் அல்லர். நாட்டு மக்களின் வாக்குகளாலேயே இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். எனவே, பொருளாதாரத்தில் மாத்திரமா சீரழிவு இருக்கிறது?
எமது நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டன. மனித சிந்தனைகள் சீரழிந்திருக்கின்றன. எனவே, எம் கண்ணெதிரே இருப்பது ஓர் அழிவடைந்த தேசமாகும். நாம் ஒரு தீர்வுகட்டமான திருப்பு முனைக்கு வந்துள்ளோம்.

இந்த ஆட்சியாளர்களினால் இன்று நாட்டில் அரிசி, எரிபொருள் மற்றும் ஔடதங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு தோன்றியுள்ளது. கடன் செலுத்தமுடியாத நாடாக மாறியிருக்கிறோம். வாழ முடியாத ஒரு நாடாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது.
சட்டம் நடைமுறைப்படுத்தப்படாத, ஒழுக்கமில்லாத, போதைவஸ்துகள் நிரம்பிய மற்றும் குற்றச்செயல்கள் மலிந்த ஒரு நாடே இன்றைய பெறுபேறாக இருக்கிறது. இதே பயணப்பாதையில் சென்று நாம் செத்து மடியப் போகிறோமா? இல்லையென்றால் ஒன்றாக எழுச்சிபெறப் போகின்றோமா? மக்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.
எம்மிடம் சுலபமான வழியும் இருக்கிறது. அதாவது, எவ்வித பிரச்சினையும் இன்றி எல்லோரும் இதே அழிவுப் பாதையில் சுடுகாட்டை நோக்கி பயணிக்கவும் முடியும். இல்லையென்றால், நாம் திடசங்கற்பத்துடன், ஒன்றாக எழுச்சி பெற வேண்டும்.

சுடுகாட்டுக்குச் செல்லும் பாதையை நிராகரித்து நாம் எழுச்சி பெறுவோம் என்ற பிரேரணையை முன்வைக்கவே கண்டி நகரில் நாம் அனைவரும் திரண்டிருக்கிறோம். இந்த ஆட்சியாளர்களிடம் இருந்து இதைவிட எவ்வாறன மீதி இருக்கை கிடைக்கப்போகிறது.

எந்த துறையில் நாம் வென்றிருக்கிறோம், எந்த துறையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. எந்த துறையை பற்றிய எதிர்பார்ப்பு இருக்கிறது என்று எவராவது கூற முடியுமா? இப்பொழுதும் நீங்கள் விழித்தெழாவிட்டால் இனி ஒருபோதுமே எழுச்சிபெற மாட்டீர்கள்.“ என தெரிவித்தார்.






அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |







**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME